ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1791/32 - 2013 ජනවාරි මස 03 බ්‍රහස්පතින්දා - 2013.01.03
1791/32 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

எனது இல. : 01/10/03/04.

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்படும் நியமனங்கள்

ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் சீ. நந்த மெத்தியு அவர்களால் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதனை இதன் மூலம் அறிவிக்கின்றேன் :-

1. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திரு. ஆர். எம். ஜயசேகர அவர்கள், 2012.11.20 ஆந் திகதி முதல் பண்டாரவளை வலயக்கல்வி காரியாலயத்திற்கு வலயக்கல்விப் பணிப்பாளராக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2013.04.30 ஆந் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் பண்டாரவளை வலயக்கல்வி காரியாலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள் பணி ஆற்றுவதற்கு.

2. ஊவா மாகாண வீதி பணிப்பாளர் திரு. ஏ. ஏ. பீ. எஸ். கே. கருணாரத்ன அவர்கள் 2012.11.24 ஆந் திகதி முதல் 2012.12.03 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2012.11.24 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை பொறியியல் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எஸ். எம். ஜயசுந்தர அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண வீதி பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

3. ஊவா மாகாண சபையின் சபைச் செயலாளர் திரு. கே. டி. சிறிசேன அவர்கள் 2012.11.28 ஆந் திகதி முதல் 2012.12.07 ஆந் திகதி வரை சுகயீன விடுமுறை எடுத்திருப்பதால், 2012.11.28 ஆந் திகதி முதல் அவர் மீள சேவைக்கு திரும்பும் வரை இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு I ஐ சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டபிள்யு. எம். எம். ஜீ. அபேசிங்க பண்டா அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண சபையின் சபைச் செயலாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

4. ஊவா மாகாண பொறிமுறை பணிப்பாளராக சேவையாற்றும் திரு. எஸ். டி. தென்னகோன் அவர்கள் 2012.12.11 ஆந் திகதி முதல் 2012.12.18 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2012.12.11 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை பொறியியல் சேவையை சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எம். டி. ஜீ. ஏ. என். லக்மால் அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண பொறிமுறை பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

5. ஊவா மாகாண சுகாதார சேவை பணிப்பாளராக சேவையாற்றும் வைத்தியர் திருமதி எம். கே. டி. சேனாநாயக அவர்கள் 2012.12.10 ஆந் திகதி முதல் 2012.12.15 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2012.12.10 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, வைத்தியர் திருமதி ஜே. சி. எம். தென்னகோன் அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

6. ஊவா மாகாண சுகாதார சேவை பணிப்பாளராக சேவையாற்றும் வைத்தியர் திருமதி எம். கே. டி. சேனாநாயக அவர்கள் 2012.12.26 ஆந் திகதி முதல் 2012.12.31 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2012.12.26 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, வைத்தியர் திருமதி ஜே. சீ. எம். தென்னகோன் அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

எச். எம். சோமதிலக,
ஊவா மாகாண ஆளுநரின் செயலாளர்.

ஆளுநரின் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை.

*1- 519*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.